**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.17
https://ngmtamil.in/

# உளவியல் நோக்கில் காரைக்கால் அம்மையாரின் வாழ்வியல்

**க.கமலப்பிரியா,**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், வேளாளர் மகளிர் கல்லூரி,ஈரோடு

**முனைவர் ப.ஈஸ்வரி,** நெறியாளர்

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி,ஈரோடு.

**முன்னுரை**

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகத் திகழும் காரைக்கால் அம்மையாரின் வாழ்வியலை, பெரியபுராணம் விளக்குகின்றது. சைவ பக்தி இயக்கத்தில் இவருக்கெனத் தனி சிறப்பிடம் உண்டு. இவர் சிவபெருமான் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகத், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் மற்றும் அற்புதத் திருவந்தாதி என்ற இலக்கியங்களைப் படைத்துள்ளார். காரைக்கால் அம்மையாரின் வாழ்வியலை, உளவியல் நோக்கில் ஒப்புமைபடுத்தி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உளவியல் துறை**

உளவியல் என்பது மனித மனம், சிந்தனை மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யும் துறையாக அமைகின்றது. இது செயல்முறை ஆய்வுகளின் அடிப்படையிலான முடிவுகளைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது. உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், ஆளுமை, நடத்தை போன்ற நிலைப்பாடுகள் உளவியலின் அடிப்படைகளாக அமைகின்றன.

**உளவியல் வகைமை**

பொது உளவியல், கல்வி உளவியல். அறிவாற்றல் உளவியல், சமூக உளவியல், உளப்பகுப்பு உளவியல், நடத்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், பெண்ணிய உளவியல், உடல்சார் உளவியல், அமைப்பு நிலை உளவியல், அரசியல் உளவியல். ஒப்பீட்டு உளவியல், நடைமுறை உளவியல், வளர்ச்சி உளவியல், மருத்துவ உளவியல் போன்ற பல்வேறு வகைமைகளை உள்ளடக்கி, உளவியல் துறை பரந்துபட்டதாக அமைகின்றது.

**உளவியல் நோக்கில் காரைக்கால் அம்மையாரின் வாழ்வியல்**

காரைக்கால் அம்மையார், தமிழ் பக்தி இயக்கத்தின் சிறந்த பெண் ஞானியாகவும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் திகழ்கின்றார். இல்லற வாழ்விலிருந்து விளகி சைவத்தின் மீது பற்று கொண்டு, சிவ பெருமானின் திருநடனத்தைக் கண்டு, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் மற்றும் அற்புதத் திருவந்தாதி போன்ற இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

**"உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்**
**கரைவினால் காரைக்கால் பேய்சொற் – பருவுவார்**
**ஆராத அன்பினோடு அண்ணலைச்சென்று ஏத்துவார்**
**பேராத காதல் பிறந்து"(1)**

என்ற அற்புதத் திருவந்தாதியின் பாடல் வரிகள், காரைக்கால் அம்மையாராகிய "பேயின்" சொற்களாலான அந்தாதி வெண்பாக்களை உண்மையான பக்திப் பெருக்கோடு படிப்பவர்கள், முடிவில்லாத தூய அன்போடு இறைவனை அடைவார்கள் என்று விளக்குகின்றன.

பிற்காலத்தில் எழுந்த அந்தாதி அமைப்பிலான இலக்கியங்களுக்கு, இவரின் அற்புதத் திருவந்தாதி முன்னோடியாக அமைகின்றது. இவ்வெண்பாக்கள் இறைவன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக மட்டும் விளங்காமல், சிறந்த இலக்கிய வகைமையாகவும் விளங்குகின்றன. இவரின் வாழ்வியல் நிகழ்வுகள் பல்வேறு நிலைகளில் உளவியல் துறையோடு ஒப்புமை கொண்டதாக அமைகின்றன.

**நடத்தைக் கோட்பாடு**

"மனிதனின் வெளிப்டையான அல்லது புறத்தே இருந்து ஆராயக்கூடிய நடத்தையை மட்டுமே உளவியல் ஆராய்ந்து அறிய முற்பட வேண்டும்"(2) என்பது ஜான் வாட்சனின், நடத்தைக் கோட்பாடு பற்றிய கருத்தாகும். இளம் வயதிலிருந்து சிவன் மீது பற்று கொண்ட காரைக்கால் அம்மையார், திருமணத்திற்குப் பிறகும் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து வந்தார். ஒரு நாள், தன் கணவன் கொடுத்த இரு மாங்கனிகளுள், ஒன்றைச் சிவனடியார்க்குப் படைத்தார். மீதமுள்ள ஒரு மாங்கனியை தன் கணவனிற்குப் படைத்த போது, மற்றொன்றும் வேண்டுமென்று கூறினான். என்ன செய்வதென்று அறியாது, அம்மையார் இறைவனிடம் வேண்டினார், மாங்கனி கிடைத்தது. அதனை உண்டவன், அதன் தனிச் சுவை பற்றி வினவினான். அம்மையாரும் நிகழ்ந்ததைக் கூற, அவன் மனைவியின் இறைத்தன்மை அறிந்து விளகினான் என்பதை,

**"விடுவதே எண்ண மாக மேவிய முயற்சி செய்வான்**
**படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி"(3)**

என்ற வரிகள் விளக்குகின்றன.

இல்லறத்தில் பொதுவான மனித இயல்புகளே போற்றப்படுகின்றன. வழக்கத்திற்கு மாறான இறையருளினால், காரைக்கால் அம்மையாரின் கணவர் அவரைவிட்டுப் பிரியும் எண்ணம் கொண்டார். இது அம்மையாரின் இயல்பு நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தினால் எழுந்த விளைவாக அமைகின்றது. ஒரு விடயத்தை உண்மைகளின் அடிப்படையில் நடுநிலையாகக் காணும் புறவய நோக்கில், அம்மையாரின் கணவரின் செயல், இயல்பான மனித வாழ்வின் வெளிப்பாடாக அமைகின்றது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**உடல்சார் உளவியல்**

ஒருவரின் மனதில் மறைந்திருக்கும் எண்ணங்களை, அவரது முகமே காட்டிவிடும் என்பதை,

**"அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்"(4)**

என்ற குறள் வழி, வள்ளுவர் விளக்குகின்றார். இளம் வயதிலிருந்து தேர்ந்த அழகுடன் திகழ்ந்த காரைக்கால் அம்மையார், தன் எண்ணங்களிலும் செயல்களிலும் நேர்மையுடனும், உண்மையுடனும் உள்ளத்து அழகினை வெளிப்படுத்தினார்.

கணவர் வேறொரு இல்லறம் மேற்கொண்ட நிலை பற்றி அறிந்த போது, இறைவனிடத்து தீராத பற்று கொண்டு, தன் அழகை, உடலை வெறுத்து, பேய் வடிவம் வேண்டுமென்று சிவனிடம் வேண்டி அதனைப் பெற்றார். இதனை,

**"ஆன அப்பொழுது மன்றுள் ஆடுவார் அருளி னாலே**
**மேல்நெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்"(5)**

என்ற வரிகள் விளக்குகின்றன.

**நெறிபிறழ் உளவியல்**

இயல்பான நடத்தைகளுக்கு மாறாக நிகழ்வனவற்றை நெறிபிறழ் உளவியல் என்று வகைபடுத்துகின்றனர். பிராய்டின் உளப்பகுப்பாய்வு இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக அமைகின்றது.

**"தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி**
**மலையின்மேல் ஏறும்போது மகிழ்ச்சியால் அன்பு பொங்க"(6)**

என்ற வரிகள், சிவபெருமானின் திருக்கயிலையில், காலால் நடப்பதைத் தவிர்த்த காரைக்கால் அம்மையார், தலையினால் நடந்து சென்ற நிகழ்வினை எடுத்துரைப்பதாக அமைகின்றன. இந்நிகழ்வில், காரைக்கால் அம்மையாரின் அளவற்ற பக்தி வெளிப்பாடு, விளக்கப்படுகின்றது. இது இயல்பான பக்தி நிலையிலிருந்து மாறுபட்டதாக, நெறிபிறழ் உளவியலின் பகுதியாக அமைகின்றது.

**இறையருள் வெளிப்பாடு**

திருக்கயிலையில் சிவனின் திருநடனத்தைக் கண்ட காரைக்கால் அம்மையார், பக்தி வெளிப்பாடாக வெண்பாக்களைப் பாடினார். இறுதியாக இறைவனிடம், மறு பிறப்பற்ற வாழ்வும், மறு பிறப்பு உண்டெனில் இறைவனை மறவாதிருக்கும் வரமும் வேண்டியதாகப் பெரியபுராணம் வழி சேக்கிழார் எடுத்துரைக்கின்றார். இது இறை கோட்பாட்டின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இதனை,

**"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி"(7)**

என்ற வரிகள் விளக்குகின்றன.

**தொகுப்புரை**

காரைக்கால் அம்மையாரின் வாழ்வியலை, சேக்கிழார் பெரியபுராணத்தில் திறம்பட விளக்கியுள்ளார். பெரியபுராணத்தின் வழி, காரைக்கால் அம்மையார் சைவத்தின் மீதும், சிவபெருமான் மீதும் கொண்ட அன்பு நிலையை அறிய முடிகின்றது. இவரின் வாழ்வியல் பல்வேறு நிலைகளில், உளவியல் துறையோடு ஒப்புமை கொண்டதாக அமைகின்றது. நடத்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், உடல்சார் உளவியல் போன்ற உளவியல் வகைமைகளை, இவரின் வாழ்வியலோடு தொடர்பு படுத்த முடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1) அற்புதத் திருவந்தாதி, பா.எண்-101
2) உளவியல்-குமரிச்செழியன், பக்க எண்-9
3) பெரியபுராணம் பா.எண்-1753
4) குறள்-706
5) பெரியபுராணம் பா.எண்-1771
6) மேலது பா.எண்-1777
7) மேலது பா.எண்- 1781

**துணைநூற் பட்டியல்**

[1]. திருச்சிற்றம்பலம், சிவ. *பெரியபுராணம்*. கங்கை புத்தக நிலையம், n.d.
[2]. தங்க விசுவநாதன், ஈரோடு. *அறுபத்து மூவர் வரலாறு*. கவிதா பப்ளிகேஷன், n.d.
[3]. குமரிச்செழியன். *உளவியல்*. சாரதா பதிப்பகம், n.d.
[4]. வெங்கட்டம்மாள், பெ. *பொது உளவியல்*. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், n.d.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)